Utdanningsdirektoratet

# Eksamen

30.05.2018

## PSP5564 Tamil nivå III

Nynorsk/Bokmål

## Nynorsk

| Eksamensinformasjon | |
|---|---|
| Eksamenstid | Eksamen varer i 5 timar. |
| Hjelpemiddel | Alle hjelpemiddel er tillatne, bortsett frå Internett og andre verktøy som kan brukast til kommunikasjon.<br><br>For norsk, samisk, finsk som andrespråk og framandspråka er heller ikkje omsetjingsprogram tillatne.<br><br>Ved bruk av nettbaserte hjelpemiddel til eksamen er det viktig å kontrollere at kandidatane ikkje kan kommunisere med andre (dvs. samskriving, chat, alle moglegheiter for å utveksle informasjon med andre) under eksamen. |
| Bruk av kjelder | Dersom du bruker kjelder i svaret ditt, skal dei alltid førast opp på ein slik måte at lesaren kan finne fram til dei.<br><br>Du skal føre opp forfattar og fullstendig tittel på både lærebøker og annan litteratur. Dersom du bruker utskrifter eller sitat frå Internett, skal du føre opp nøyaktig nettadresse og nedlastingsdato. |
| Informasjon om oppgåva | Du skal svare på alle dei tre oppgåvene i oppgåvesettet.<br><br>Du får utteljing for å vise kunnskap om samfunns- og kulturforhold i tamilspråklege område der det er relevant.<br><br>Det er kompetansen du viser i heile oppgåvesettet, som skal vurderast. |
| Kjelder | Sjå siste side i oppgåvesettet. |
| Informasjon om vurderinga | Sjå eksamensrettleiinga med kjenneteikn på måloppnåing til sentralt gitt skriftleg eksamen. Eksamensrettleiinga finn du på Utdanningsdirektoratets nettsider. |

# Oppgåve 1

Les teksten under, og vurder om utsegnene a–f er sanne eller usanne. Grunngi svara dine ut frå det som står i teksten. Skriv **på norsk**.

a. Saumiamorthy Thondaman blei født i India 30. august 1913.

b. Arumugam Thondaman er bror til Saumiamorthy Thondaman.

c. I 1815 var heile Ceylon ein del av det britiske kolonisystemet.

d. இலங்கை இந்தியக் காங்கிரஸ் blei danna av Peri Sundaram.

e. Dei fleste tamilar som bur i fjellområda på Sri Lanka, har flytta dit frå Malaysia.

f. Under den britiske kolonitida blei det innført berre éi reform på Ceylon.

**சௌமியமூர்த்தி தொண்டமான்**

சௌமியமூர்த்தி தொண்டமான் தென் இந்தியாவில் சென்னைக்கு அண்மையில் உள்ள முன்னபுத்தூர் என்னும் இடத்தில் முப்பதாம் திகதி ஆவணிமாதம் ஆயிரத்து தொள்ளாயிரத்து பதின்மூன்றாம் ஆண்டு பிறந்தார். இவர் பிற்காலத்தில் சிறிலங்காவின் கால்நடை மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சராக இருந்த ஆறுமுகம் தொண்டமான் என்பவரின் தந்தைவழிப் பேரனும் ஆவார். இலங்கை வாழ் மலையகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவனாகப் பல ஆண்டுகள் திகழ்ந்தார். இலங்கைத் தீவின் மிகப் பெரிய தொழிற்சங்கமாகத் திகழும் இலங்கைத் தொழிலாளர் சங்கத்தை ஆரம்பித்து அதன் தலைவராக இறக்கும் வரை பணிபுரிந்த ஓர் ஒப்பற்ற தலைவர் ஆவார். அத்துடன் தொடர்ந்து இருபத்தொரு ஆண்டுகள் இலங்கைப் பாராளுமன்றத்தில் அமைச்சராகப் பதவி வகித்தார். இவர் ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றி ஒன்பதாம் ஆண்டு காலமானார்.

**தொழிற்சங்க வாழ்வு**

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து ஒன்பதாம் ஆண்டு பெரி சுந்தரம் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு நிறுவனம் தான் இலங்கை இந்தியக் காங்கிரஸ் ஆகும். இலங்கை பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரம் பெற்ற பின் இந்நிறுவனம் ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பதாம் ஆண்டு இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம் எனப் பெயர் மாற்றப்பட்டது. இச்சங்கமானது இலங்கையில் மிகப் பெரிய தொழிற்சங்கமாகச் செயற்பட்டது. தொண்டமானுக்கும் அப்துல் அசீசுக்கும் இடையே நடைபெற்ற தலைவர் போட்டியில் தொண்டமான் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இத் தொழிற்சங்கமானது அன்றுமுதல் இன்றுவரை இலங்கை மலையகத் தமிழ்த் தொழிலாளர்களின் அரசியல், கல்வி, சம்பள உயர்வுகள், வாழ்க்கைத் தராதர மேம்பாடுகள் போன்ற அடிப்படை உரிமைகளுக்காக உழைத்துக் கொண்டு இருக்கும் நிறுவனமாகச் செயற்படுகின்றது. இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸில் மலையகத் தமிழர்களுக்காக நாற்பது ஆண்டுகளாகச் செயற்பட்டவர் திரு.சௌமியமூர்த்தி தொண்டமான் என்றால் மிகையாகாது.

**அரசியல் பிரவேசம்**

ஆயிரத்து ஐந்நூற்று ஐந்தாம் ஆண்டிற்கு முன் பல பகுதிகளாக பிரிக்கப்பட்டு சிங்கள, தமிழ் அரசர்கள் இலங்கைத் தீவை ஆண்டார்கள். அதன் பின் அங்கு வியாபாரத்திற்காக வந்த போத்துக்கேயர், ஒல்லாந்தர் மலையகம் தவிர்ந்த ஏனைய கரையோரப் பகுதிகளை அவர்களின் அடக்குமுறை ஆட்சியின் கீழ் கொண்டுவந்தார்கள். ஆயிரத்து எழுநூற்று தொண்ணூற்று ஆறாம் ஆண்டு பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பகுதியைக் கைப்பற்றி தமது ஆட்சியை அங்கு கொண்டு வந்தார்கள். அதன் பின் அவர்கள் ஆயிரத்து எண்ணூற்று பதினைந்தாம் ஆண்டு மலையகத்தைக் கைப்பற்றி இலங்கை முழுவதையும் தமது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்து இலங்கையில் ஒற்றை ஆட்சி முறையை அறிமுகப்படுத்தினார்கள்.

இக்காலங்களில் இந்தியாவில் இருந்த பிரித்தானியாவின் கிழக்கிந்திய நிறுவனம் தமது வியாபாரங்களை இலங்கையில் அறிமுகப்படுத்தியது. இவர்கள் இலங்கையில் தேயிலை, இறப்பர், கோப்பி போன்ற பெரும்தோட்டத் தொழிற்சாலைகளை நிறுவினார்கள். இப் பெரும் தோட்டங்களில் வேலை செய்வதற்கு தொழிலாளர் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால் தென் இந்தியாவில் இருந்து தொழிலாளர்கள் பெரும் தோட்டங்களில் வேலை செய்வதற்கு வரவழைக்கப்பட்டார்கள். இப்படி வரவழைக்கப்பட்டவர்களில் ஒருவர் தான் சௌமியயமூர்த்தி தொண்டமானின் தந்தையாராகிய கருப்பையா. அவர் தன் சொந்த முயற்சியால் சொந்தமாக தேயிலைத் தோட்டம் ஒன்றை வாங்கினார். தந்தையார் உடல் நிலை பாதிப்புக் காரணமாக தொண்டமான் தந்தையாரின் தோட்ட நிர்வாகத்தைப் பொறுப்பு ஏற்றார்.
பிரித்தானிய ஆட்சியானது உள்நாட்டுப் போராட்டங்களைத் தவிர்ப்பதற்கு நிர்வாகத்தில் மாற்றங்கள் செய்து பல சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தது. குறிப்பாக கோல்புறூக் சீர்திருத்தம், டொனமூர் சீர்திருத்தம், சோல்பரி சீர்திருத்தம் என்பவற்றைக் கூறலாம். ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து ஏழாம் ஆண்டு பாராளுமன்ற அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்காக பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. அதில் இலங்கை இந்தியக் காங்கிரஸ் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையில் ஏழு ஆசனங்களைக் கைப்பற்றியது. ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து எட்டாம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த பின் புதிய குடியுரிமைச் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி மலையகத் தமிழ் மக்கள் பலரை நாடற்றவர்களாக்கியது. இதனை தொண்டமான், தமிழரசுக் கட்சித்தலைவர் எஸ்.யே.வி செல்வநாயகம் போன்றோர் மிகவும் கடுமையாக எதிர்த்தனர். சுதந்திர இலங்கையில் மலையகத் தமிழ் மக்களுக்கும் தமிழர் உரிமைகளுக்கும் தொண்டமான் ஆற்றிய தொண்டு இலங்கைத்தமிழர் சரித்திரத்தில் மிக முக்கியமான ஓர் அத்தியாயம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

## Oppgåve 2

**தமிழில் உங்கள் கருத்தை எழுதுக**

அனைத்து நாடுகளிலும் தொழிலாளர்களின் உரிமைகளைக் கவனத்தில் கொண்டு பல சட்டங்கள் உண்டு. வேலை நேரம், பாதுகாப்பான சூழ்நிலை, குறைந்தபட்ச சம்பளம், முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் உள்ள தொடர்புகள், மருத்துவ தேவைகள், விடுமுறை வசதிகள் என்பவற்றைக் குறிப்பாகக் கூறலாம். நோர்வேயிலும் இவ்வகையான சட்டங்கள் இருந்தாலும் தொழிலாளர்களின் உரிமைகளில், பாதுகாப்புகளில் ஒரு சில தவறுகள் ஏற்படுவதை நாமும் நேரடியாக அல்லது செய்திகளாக அறிகின்றோம். தொழிலாளர்களுக்கு உரிமைகள் அவசியம் என்று நினைக்கின்றீர்களா? நோர்வேயினதும் தமிழர்கள் அதிகமாக வாழும் இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளினதும் தொழிலாளர் உரிமைச் சட்ட நடைமுறைகளில் பெரிய வேறுபாடுகள் உண்டா?

## Oppgåve 3

பின்வருவனவற்றில் ஒன்றைத் தெரிவு செய்து 20 வரிகளுக்கு குறையாமல் தமிழில் எழுதுக.

1. நோர்வே நாட்டு அரசியல், கலாச்சாரம், பொதுமக்கள் போக்குவரத்து, சுற்றாடற் சூழல் என்பவற்றை தமிழர் கூடுதலாக வாழும் ஒரு நாட்டுடன் ஒப்பீடு செய்க.

2. பின்வரும் காரணிகளை கவனத்தில் கொள்ளவும்:
    - தனியார் அல்லது அரசாங்க வேலை வாய்ப்பு
    - ஓய்வு ஊதியம்
    - மருத்துவக் காப்புறுதி

    நீங்கள் ஒரு வேலையை தெரிவு செய்யும் போது மேற் கூறப்பட்ட காரணிகளில் முக்கியமாக எதைக் கவனத்தில் கொள்வீர்கள்?

# Bokmål

| Eksamensinformasjon | |
|---|---|
| Eksamenstid | Eksamen varer i 5 timer. |
| Hjelpemidler | Alle hjelpemidler er tillatt, bortsett fra Internett og andre verktøy som kan brukes til kommunikasjon.<br><br>For norsk, samisk, finsk som andrespråk og fremmedspråkene er heller ikke oversettelsesprogrammer tillatt.<br><br>Ved bruk av nettbaserte hjelpemidler under eksamen er det ikke tillatt å kommunisere med andre (dvs. samskriving, chat eller andre muligheter for å utveksle informasjon med andre). |
| Bruk av kilder | Hvis du bruker kilder i besvarelsen din, skal disse alltid oppgis på en slik måte at leseren kan finne fram til dem.<br><br>Du skal oppgi forfatter og fullstendig tittel på både lærebøker og annen litteratur. Hvis du bruker utskrifter eller sitater fra Internett, skal du oppgi nøyaktig nettadresse og nedlastingsdato. |
| Informasjon om oppgaven | Du skal svare på alle de tre oppgavene i oppgavesettet.<br><br>Du får uttelling for å vise kunnskap om samfunns- og kulturforhold i tamilspråklige områder der det er relevant.<br><br>Det er kompetansen du viser i hele oppgavesettet, som skal vurderes. |
| Kilder | Se siste side i oppgavesettet. |
| Informasjon om vurderingen | Se eksamensveiledningen med kjennetegn på måloppnåelse til sentralt gitt skriftlig eksamen. Eksamensveiledningen finner du på Utdanningsdirektoratets nettsider. |

# Oppgave 1

Les teksten nedenfor, og vurder om utsagnene a–f er sanne eller usanne. Begrunn svarene dine ut fra det som står i teksten. Skriv **på norsk.**

a. Saumiamorthy Thondaman ble født i India 30. august 1913.

b. Arumugam Thondaman er bror til Saumiamorthy Thondaman.

c. I 1815 var hele Ceylon en del av det britiske kolonisystemet.

d. இலங்கை இந்தியக் காங்கிரஸ் ble dannet av Peri Sundaram.

e. De fleste tamiler som bor i fjellområdene på Sri Lanka, har flyttet dit fra Malaysia.

f. Under den britiske kolonitiden ble det innført bare én reform på Ceylon.

**சௌமியமூர்த்தி தொண்டமான்**

சௌமியமூர்த்தி தொண்டமான் தென் இந்தியாவில் சென்னைக்கு அண்மையில் உள்ள முன்னபுத்தூர் என்னும் இடத்தில் முப்பதாம் திகதி ஆவணிமாதம் ஆயிரத்து தொள்ளாயிரத்து பதின்மூன்றாம் ஆண்டு பிறந்தார். இவர் பிற்காலத்தில் சிறிலங்காவின் கால்நடை மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சராக இருந்த ஆறுமுகம் தொண்டமான் என்பவரின் தந்தைவழிப் பேரனும் ஆவார். இலங்கை வாழ் மலையகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவனாகப் பல ஆண்டுகள் திகழ்ந்தார். இலங்கைத் தீவின் மிகப் பெரிய தொழிற்சங்கமாகத் திகழும் இலங்கைத் தொழிலாளர் சங்கத்தை ஆரம்பித்து அதன் தலைவராக இறக்கும் வரை பணிபுரிந்த ஓர் ஒப்பற்ற தலைவர் ஆவார். அத்துடன் தொடர்ந்து இருபத்தொரு ஆண்டுகள் இலங்கைப் பாராளுமன்றத்தில் அமைச்சராகப் பதவி வகித்தார். இவர் ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றி ஒன்பதாம் ஆண்டு காலமானார்.

**தொழிற்சங்க வாழ்வு**

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து ஒன்பதாம் ஆண்டு பெரி சுந்தரம் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு நிறுவனம்தான் இலங்கை இந்தியக் காங்கிரஸ் ஆகும். இலங்கை பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரம் பெற்ற பின் இந்நிறுவனம் ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பதாம் ஆண்டு இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம் எனப் பெயர் மாற்றப்பட்டது. இச்சங்கமானது இலங்கையில் மிகப் பெரிய தொழிற்சங்கமாகச் செயற்பட்டது. தொண்டமானுக்கும் அப்துல் அசீசுக்கும் இடையே நடைபெற்ற தலைவர் போட்டியில் தொண்டமான் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இத் தொழிற்சங்கமானது அன்றுமுதல் இன்றுவரை இலங்கை மலையகத் தமிழ்த் தொழிலாளர்களின் அரசியல், கல்வி, சம்பள உயர்வுகள், வாழ்க்கைத் தராதர மேம்பாடுகள் போன்ற அடிப்படை உரிமைகளுக்காக உழைத்துக் கொண்டு இருக்கும் நிறுவனமாகச் செயற்படுகின்றது. இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸில் மலையகத் தமிழர்களுக்காக நாற்பது ஆண்டுகளாகச் செயற்பட்டவர் திரு.சௌமியமூர்த்தி தொண்டமான் என்றால் மிகையாகாது.

**அரசியல் பிரவேசம்**

ஆயிரத்து ஐந்நூற்று ஐந்தாம் ஆண்டிற்கு முன் பல பகுதிகளாக பிரிக்கப்பட்டு சிங்கள, தமிழ் அரசர்கள் இலங்கைத் தீவை ஆண்டார்கள். அதன் பின் அங்கு வியாபாரத்திற்காக வந்த போத்துக்கேயர், ஒல்லாந்தர் மலையகம் தவிர்ந்த ஏனைய கரையோரப் பகுதிகளை அவர்களின் அடக்குமுறை ஆட்சியின் கீழ் கொண்டுவந்தார்கள். ஆயிரத்து எழுநூற்று தொண்ணூற்று ஆறாம் ஆண்டு பிரித்தானியர் இலங்கையின் கரையோரப் பகுதியைக் கைப்பற்றி தமது ஆட்சியை அங்கு கொண்டு வந்தார்கள். அதன் பின் அவர்கள் ஆயிரத்து எண்ணூற்று பதினைந்தாம் ஆண்டு மலையகத்தைக் கைப்பற்றி இலங்கை முழுவதையும் தமது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்து இலங்கையில் ஒற்றை ஆட்சி முறையை அறிமுகப்படுத்தினார்கள்.

இக்காலங்களில் இந்தியாவில் இருந்த பிரித்தானியாவின் கிழக்கிந்திய நிறுவனம் தமது வியாபாரங்களை இலங்கையில் அறிமுகப்படுத்தியது. இவர்கள் இலங்கையில் தேயிலை, இறப்பர், கோப்பி போன்ற பெரும்தோட்டத் தொழிற்சாலைகளை நிறுவினார்கள். இப் பெரும் தோட்டங்களில் வேலை செய்வதற்கு தொழிலாளர் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால் தென் இந்தியாவில் இருந்து தொழிலாளர்கள் பெரும் தோட்டங்களில் வேலை செய்வதற்கு வரவழைக்கப்பட்டார்கள். இப்படி வரவழைக்கப்பட்டவர்களில் ஒருவர் தான் சௌமியமூர்த்தி தொண்டமானின் தந்தையாராகிய கருப்பையா. அவர் தன் சொந்த முயற்சியால் சொந்தமாக தேயிலைத் தோட்டம் ஒன்றை வாங்கினார். தந்தையார் உடல் நிலை பாதிப்புக் காரணமாக தொண்டமான் தந்தையாரின் தோட்ட நிர்வாகத்தைப் பொறுப்பு ஏற்றார்.
பிரித்தானிய ஆட்சியானது உள்நாட்டுப் போராட்டங்களைத் தவிர்ப்பதற்கு நிர்வாகத்தில் மாற்றங்கள் செய்து பல சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தது. குறிப்பாக கோல்புறுாக் சீர்திருத்தம், டொனமுர் சீர்திருத்தம், சோல்பரி சீர்திருத்தம் என்பவற்றைக் கூறலாம். ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து ஏழாம் ஆண்டு பாராளுமன்ற அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்காக பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. அதில் இலங்கை இந்தியக் காங்கிரஸ் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையில் ஏழு ஆசனங்களைக் கைப்பற்றியது. ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து எட்டாம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த பின் புதிய குடியுரிமைச் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி மலையகத் தமிழ் மக்கள் பலரை நாடற்றவர்களாக்கியது. இதனை தொண்டமான், தமிழரசுக் கட்சித்தலைவர் எஸ்.யே.வி செல்வநாயகம் போன்றோர் மிகவும் கடுமையாக எதிர்த்தனர். சுதந்திர இலங்கையில் மலையகத் தமிழ் மக்களுக்கும் தமிழர் உரிமைகளுக்கும் தொண்டமான் ஆற்றிய தொண்டு இலங்கைத்தமிழர் சரித்திரத்தில் மிக முக்கியமான ஓர் அத்தியாயம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

## Oppgave 2

**தமிழில் உங்கள் கருத்தை எழுதுக**

அனைத்து நாடுகளிலும் தொழிலாளர்களின் உரிமைகளைக் கவனத்தில் கொண்டு பல சட்டங்கள் உண்டு. வேலை நேரம், பாதுகாப்பான சூழ்நிலை, குறைந்தபட்ச சம்பளம், முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் உள்ள தொடர்புகள், மருத்துவ தேவைகள், விடுமுறை வசதிகள் என்பவற்றைக் குறிப்பாகக் கூறலாம். நோர்வேயிலும் இவ்வகையான சட்டங்கள் இருந்தாலும் தொழிலாளர்களின் உரிமைகளில், பாதுகாப்புகளில் ஒரு சில தவறுகள் ஏற்படுவதை நாமும் நேரடியாக அல்லது செய்திகளாக அறிகின்றோம். தொழிலாளர்களுக்கு உரிமைகள் அவசியம் என்று நினைக்கின்றீர்களா? நோர்வேயினதும் தமிழர்கள் அதிகமாக வாழும் இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளினதும் தொழிலாளர் உரிமைச் சட்ட நடைமுறைகளில் பெரிய வேறுபாடுகள் உண்டா?

## Oppgave 3

பின்வருவனவற்றில் ஒன்றைத் தெரிவு செய்து 20 வரிகளுக்கு குறையாமல் தமிழில் எழுதுக.

1. நோர்வே நாட்டு அரசியல், கலாச்சாரம், பொதுமக்கள் போக்குவரத்து, சுற்றாடற் சூழல் என்பவற்றை தமிழர் கூடுதலாக வாழும் ஒரு நாட்டுடன் ஒப்பீடு செய்க.

2. பின்வரும் காரணிகளை கவனத்தில் கொள்ளவும்:
   - தனியார் அல்லது அரசாங்க வேலை வாய்ப்பு
   - ஓய்வு ஊதியம்
   - மருத்துவக் காப்புறுதி

   நீங்கள் ஒரு வேலையை தெரிவு செய்யும் போது மேற் கூறப்பட்ட காரணிகளில் முக்கியமாக எதைக் கவனத்தில் கொள்வீர்கள்?

Blank side

## Kjelder/Kilder:

Oppgåve 1 / Oppgave 1:

Sri Lanka in the Modern age, A history of contested identities by Nira Wickramasinghe

Saumiamoorthy Thondaman: Pragmatic plantation Tamil Patriarch Who Emancipated his Disempowered people by D.B.S Jeyaraj.

https://en.wikipedia.org/wiki/ceylon_workers%27_congress

http://dbsjeyaraj.com/dbsj/arehives/25330

https://en.wikipedia.org/wiki/ samiamoorthy_thondaman

https://ta.wikipedia.org/s/3yh

Schweigaards gate 15
Postboks 9359 Grønland
0135 OSLO
Telefon 23 30 12 00
utdanningsdirektoratet.no

Utdanningsdirektoratet